13.11.6.2024

<u>கூடுதல் அமா்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமா்வு வழக்கு எண். 257/2014</u>

அ.சா.9

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்துரு | | |
| த/பெ | சுப்பிரமணி | | |
| கிராமம் | அரியாங்குப்பம் | தொழில் | |
| தாலுக்கா | பாண்டிச்சேரி | வயது | 34/2024 |
| மாவட்டம் | பாண்டிச்சேரி | தேதி | |

இன்று உதவியாளா் அவா்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறாா்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது பிளம்பா் வேலை செய்து வருகிறேன். என்னை சந்திரன் என்றும், என் அப்பாவை மின்னல்மணி , மணி என்றும், ஊரில் அழைப்பாா்கள். தமிழ்வாணன் என்பவரை எனக்கு தெரியாது. அப்படிப்பட்ட யாருக்கும் எனக்கும் தொடா்பில்லை. அதுமாதிரி நபா் என்னை என் தொலைபேசியில் தொடா்பு கொண்டாரா என்றால் அவ்வாறு இல்லை. இது சம்மந்தமாக என்னை போலீசாா் விசாரணை செய்யவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 09.09.2009ந் தேதி இரவு சுமாா் 9.30 மணியளவில் கண்டமங்கலத்தை சோ் ந்த ரங்கசாமி மகன் தமிழ்வாணன் என்பவா் அவரது செல்போன் எண் ஆன 9751534262 என்ற நெம்பரிலிருந்து எனது செல்போன் எண் ஆன 9791492151 என்ற எண்ணிற்கு தொடா்பு கொண்டு அவா் தற்போது திருபுவனை கிராமத்தில் இருப்பதாகவும், கபடி போட்டி பற்றி பேச மறுநாள் வருவதாகவும் என்னிடம் கூறினாா் என்றும், எனக்கு மேற்படி தமிழ்வாணன் கபடி விளையாடும் போது பழக்கம் என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லி

விட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**